


# எழுச்சிமுரசு.

278
005

திராவிட மாணவர் கழக வெளியீடு.

# எழுச்சி முரசு

இரா. நெடுஞ்செழியன் B. A. (Hons.) அவர்கள்

"பேச்சு"

★

வெளியிட்டவர் :

திராவிட மாணவர் கழகம்,

பொன்மலை.

T020278
Sarasvathi Mahal Library. Thanjavur

விலை- 4 அணா.

# நூன்முகம்

இந்நூல், பொன்மலை திராவிட மாணவர் கழக
முதலாண்டு விழாவின்போது
தோழர் இரா. நெடுஞ்செழியன் B. A. (Hons.)
அவர்கள் ஆற்றிய சொற்பொழிவிலே சிந்திய
சில சொற்களை ஒன்றுசேர்த்த ஒரு தொகுப்
பாகும். நாக்கு அடிப்பாகவும், வாய் பறை
யாகவும் கொண்டு அன்று எழுப்பிய ஒலிகள்
வீழ்ச்சியுற்ற திராவிட மக்களுக்கு இன எழுச்
சியைத் தரக்கூடியன என்று எண்ணி
"எழுச்சி முரசு" என்ற பெயரோடு இந்நூலை
வெளியிடுகின்றோம். வெளியிடுவதன் நோக்கம்
திராவிட நாட்டின் நாலா பக்கங்களிலும்
மாணவ பாசறைகள் ஏற்படவேண்டுமென்
பதேயாகும்.

திராவிட மாணவ கழகத்தார்,

பொன்மலை.

# எழுச்சி முரசு.

அறிவு சான்ற அவைத்தலைவர் அவர்களே! மதிப்பிற்குரிய தோழ தோழியர்களே! அன்பு கெழுமிய மாணவ இளஞ்செம்மல்களே! உங்கள் அனைவர்க்கும் என் அன்பு கலந்த வணக்கம் உரித்தாகுக. திராவிட மாணவர் கழக முதலாவது ஆண்டு விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பை எனக்களித்தற்காக எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஏன் மாணவர் கழகங்கள் ஆங்காங்கு ஏற்படுகின்றன, அவற்றின் செயல்கள் என்ன என்பனபற்றி அறிய பலர் ஆவலுறுவார்கள். மாணவர்கள் அரசியலில் கலந்துகொள்ளுவதைப்பற்றிப் பல தலைவர்கள் பலவாறு தங்கள் எண்ணங்களை எடுத்துக்கூறிவருகிறார்கள். நாம், உள்ளபடியே அரசியலில் மாணவர்கள் எவ்வளவு பங்கு கொள்ளலாம் என்பதைப்பற்றி அறிய உலக ஏட்டைப் புரட்டுவோம். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள கல்வி முறையில் அரசியல் உண்டு. அவ்வரசியல் மாணவர்களுக்கு அவர்களது நாட்டிற்கேற்றபடி நல்ல முறையில் பயன்படுகிறது. நம் நாட்டின் மாணவர்களின் மனநிலையோ பெரிதும் மாறுபட்டது; மாறுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்நிலைக்குக் காரணம் நமது கல்வி முறையேயாகும். நமது கல்லூரிகளிலும் அரசியல் பாடம் ஒன்று உண்டு காரணம் மாணவர்கள் அரசியல்பற்றி அறியவேண்டும் என்பதாகும். ஆனால் அங்கே சொந்த நாட்டு வரலாற்றினைப்பற்றிய அரசியலைச்சொல்லமாட்டார்கள். நாம் திராவிட மாணவர்

களை எந்த அளவிற்கு அரசியல் அறியவேண்டுமென்கிறோம் என்றால் அரசியல் தத்துவத்தைத் தெரிந்துகொள்ளும் அளவிற்கேயாகும். எது நமது நாடு என்பதை அறிந்து, நாட்டு நிலையைச் சீர்படுத்துவதற்காக நாம் அரசியல் வேண்டுமென்கிறோம். ஆனால் அரசியலில் பங்குகொள்ளத்தான்வேண்டுமென்று மாணவர்களைத் தூண்டவில்லை. திராவிட மாணவர்களை நாங்கள் தந்திக் கம்பிகளை அறுக்கச்சொல்லவில்லை; தண்டவாளங்களை பெயர்த்தெடுக்கக் கூறவில்லை; ஹர்த்தால் செய்யத்தூண்டவில்லை; தபாலாபீசுகளை எரிக்க ஏவவில்லை. நீங்களே அரசியலில் உங்கள் கடமையை உணருங்கள் என்றுதான் கூறுகின்றோம்.

நீங்கள் குடந்தைக் கல்லூரியில் நடந்த தண்ணீர்ப் பானை நிகழ்ச்சியைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அஹிம்ஸா வாதியாகிய காந்தியார் தோன்றிய நாடுதான் இது. முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கின்னரரும் கிம்புருடரும் அட்டதிக்கு பாலகர்களும் அந்தராத்மாக்களோடு பேசும் மகாத்மாக்களும் தோன்றி மறையும் நாடுதான். இத்தகைய நாட்டில் தான் ஒற்றுமை வளரக்கூடிய கல்லூரி மாணவர்களிடையில் வேறுபாடு காணுகிறோம். பார்ப்பனர் குடிப்பதற்கென்று ஒரு தண்ணீர்ப் பானை! மற்றவர்கள் குடிப்பதற்கு வேறு ஒரு தண்ணீர்ப்பானை! ஏன் இந்த பேதம்? வெட்கம் வேண்டாமா நாட்டுத் தலைவர்களுக்கு! ஒரு திராவிட மாணவர் பார்ப்பனர் குடிக்கும் தண்ணீர்ப்பானையிலிருந்து தண்ணீர் மொண்டு குடித்தார். அதற்காக அவருக்கு ஒரு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அவ்வபராதத்தினால் ஏற்பட்ட உணர்ச்சியின் விளைவுதான் குடந்தையில் கூட்டப்பட்ட முதல் திராவிடர் மகாநாடு. அதன் விளைவாகவே நாடெங்கும் திராவிட மாணவர் கழகங்கள் மலர்கின்றன.

இன்று நாங்கள் ஏன் திராவிடர் கழகக் கொள்கைகளை நாட்டிலே பரப்ப விரும்புகிறோம் என்பதை எடுத்துக்கூற

வேண்டியது இன்றியமையாததாக இருக்கின்றது. இங்கு செய்தித்தாள் வசதியுள்ள ஒரு வகுப்பார் திராவிட கழகத்தினரைத் துரோகிகளென்றும், ஏகாதிபத்திய தாசர்கள் என்றும் பொய்ப் பிரசாரம் செய்துவருகிறார்கள். தேசியப் போர்வையில் இருக்கும் அவர்களைத்தவிர மற்றவர்கள் இருக்கக்கூடாது என்றும் எண்ணுகின்றனர். நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும் எங்களுக்கு நாட்டுப் பற்று ஏற்பட வழியில்லையா? நாட்டுப்பற்று தேசிய வாதிகள் உள்ளத்தில் மட்டுந்தான் எழக்கூடியதா? நாங்கள் தேசத் துரோகிகளாகக் கருதப்படுவானேன்? நீங்களே சிந்தித்து நல்ல தீர்ப்புக் கூறவேண்டும் என்பதற்காகவே வழக்கை உங்கள் முன்வைக்க விரும்புகிறோம்.

நாம் உலகத்தின் பல நாட்டின் நிலைமைகளை உணருகிறோம். அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா போன்ற நாடுகளிலுள்ள மக்கள் வாழ்க்கை நிலையை அறிகின்றோம். அங்கு பொது இடங்களில் மக்கள் தோளோடு தோள் புணர்ந்து நடமாடக் காண்கிறோம். அவர்கள் வேறுபாடின்றி பழகுவதைப் பார்க்கிறோம். பிறகு நம் நாட்டை நோக்குகிறோம். நம் நிலை என்ன? ஏன் ஒரு குறிப்பிட்ட சந்து வழியே செல்லக்கூடாது; ஒரு குறிப்பிட்ட குளத்தில் இறங்கக்கூடாது; கோவிலுக்குள் நுழையக்கூடாது; காலில் செருப்புப்போட்டுக்கொண்டு வெள்ளை வேட்டி கட்டிக்கொண்டு உயர்ந்த வகுப்பார் முன்வரக்கூடாது. இம்மாதிரியான நிபந்தனைகள் ஏன்? நாம் ஒரு இனத்தைச் சேர்ந்த பெருங்குடிமக்கள் ஏன் மிகக் கேவலமாக வெறுக்கப்படவேண்டும்? ஆரியர்கள் அருகில் சென்றால் "ஒத்திப் போ" என்று சொல்லும் நிலைமை ஏன் இங்கு இருக்கவேண்டும்? இவற்றைக்கண்டே நாம் உணர வந்தோம். நாம் மிருகங்களிலும் கேடுகெட்டவர்களா? நாயைத் தடவி கொடுக்கின்றான். எருமையைத் தட்டி ஓட்டுகின்றான். அவற்றை மேன்மை நிலையில் வைத்திருக்கும்போது, உழைக்கும் மக்கள் கூட்டம் மட்டும் இங்கு இவ்வாறு வெறுக்கப்படும் நிலையில் ஏன் இருக்கவேண்டும்.

இக்கொடுமை உலகில் வேறு எங்கேனும் உண்டா? இந்நாட்டில் பல்வேறுபட்ட வீதிகள்! கோவிலில் சிலரே சில இடங்களுக்கு மட்டும் செல்லலாம்! ஆலயம் கட்டிவைக்க ஒரு கூட்டம்! அதன் உள்ளே நுழைய ஒரு கூட்டம்? ஆண்டவனை செய்துவைக்க ஒரு இனம் அதனைத்தொட மற்றொரு இனம்! இவற்றையெல்லாம் ஏனென்று கேட்டால், மீறி நடந்தால் இந்த விசித்திர நாட்டில் சிறைச்சாலை! இவையெல்லாம் கொடுமைகளல்லவா? இப்பேர்ப்பட்ட அநீதிகள் எவற்றின் பேரால் நடைபெறுகின்றன? இவையெல்லாம் ஆட்சி வெள்ளையன் கையில் இருக்கின்ற ஒரே காரணத்தினாலா நடக்கின்றன? உண்மையிலேயே வெள்ளையனா இப்படிப்பட்ட அநீதிச் சட்டங்களுக்கு முழுக்காரணம்? கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட தோழர்கள் போகக்கூடாது என்று அவனா தடுகின்றான். கோவிலில் சிறுநீரும், புழுக்கையும் விக்ரகத்தின் மேல் விழும் வௌவால்களும், மலம் தின்னும் நாயும், சாணம் போடும் மாடும் போகலாம். ஆனால் பகுத்தறிவு படைத்த ஆறு கோடி மக்கள் உள்ளே செல்வதற்கு அனுமதி இல்லை! ஏன் இந்த இழி நிலை! அந்தராத்மாக்களுடன் அடிக்கடிப் பேசுகின்ற மகாத்மாக்களும் இதைப் பார்த்துக்கொண்டு தானிருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் உரிய காரணங்களை நாம் உணர முன் வராவிட்டால் நாம் மக்களாக வாழ விரும்பவில்லை என்பதோடு எதையும் சாதிக்க இயலாதவர்களாகவும் கருதப்படுவோம் என்பதைத் திராவிட மாணவர்கள் சிந்திக்கவேண்டும்.

அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா போன்ற நாடுகளில் மக்களுக்கு அவர்தம் வாழ்க்கையிலே கொடுக்கப்படும் உரிமைகள் இந்நாட்டில் நமக்கு மறுக்கப்படக்காரணம் என்ன? நாம் நாடற்றவர்களா? மற்றைய நாட்டு மக்கள்போல் நமக்கென்று ஒரு நாடு கிடையாதா? நாம் யார்? என்பவற்றை அறிய ஆராய்ச்சி அவசியமாயிற்று. வரலாற்று ஏட்டுச் சுவடியைப் புரட்டினோம். அதில் நாம் வாழும்

நாடு திராவிட நாடு, நமக்குரிய நாடு திராவிட நாடு எனக் கண்டோம் ஐந்தாம் பள்ளி வகுப்பு முதல் ஐந்தாம் பல் கலைக்கழக வகுப்பு வரையில் ஐயர், ஆச்சாரி, சாஸ்திரி சர்மா இவர்கள் எழுதிய முதல் பக்கத்தில் இந்நாட்டுப் பூர் வீகக்குடிகள் 'திராவிடர்' என்றிருக்கக்கண்டோம். அவர் தம் மொழி தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் என்றிருந்தது திராவிடர்கள் வாணிபத்திலும் வீரத்தி லும் சிறந்து விளங்கினர் என்றும் கூறப்பட்டிருந்ததோடு அவரது சிறந்த பண்பும் கோட்பாடுகளும் தனியாகவே தூய்மையாக இருந்தன என்றும் குறிக்கப்பட்டிருந்தது. முதல் பாகத்தைப் புரட்டி இரண்டாம் பாகத்திற்கு வந் தோம். இரண்டாம் பாகத்தில் 'ஆரியர் வருகை' என இருந்தது. அதன் கீழ் ஆரியர்கள் பூர்வீகத்தில் மத்ய ஆசி யாவிலிருந்து கைபர் போலன் கணவாய்கள் வழியாக ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு இந்தியாவிற்குள் புகுந்து சிந்து நதிக் கரையை அடைந்தனர். அவர்களாலேயே ருக், யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் எழுதப்பட்டன. அவர்களது மொழியாகிய பிராகிருதம் பிறகு சமஸ்கிருதம் என்று அழைக்கப்படடது அவர்கள் யாக மந்திரம், காயத்திரி ஜெபம் ஆகியவற்றை அம்மொழியி லேயே செய்துவந்தனர். அவர்கள் சோமபானம் என்றும் மதுவை உண்டுவந்தனர். யாகத்தில் பலியிட்ட ஆடுமாடு களின் மாமிசத்தைப் புசித்துவந்தனர் என்று இவ்வாறாக எழுதியிருக்கக்கண்டு பின் ஏட்டைக்கொண்டு நாட்டைப் பார்க்கத் தொடங்கினோம்.

சேரிக்குச் சென்றோம் அங்கே உள்ளவர்களை உங்கள் தாய்மொழி எது என்று கேட்டோம். 'தமிழ்' என்றார்கள். குடியானவர்களைக்கேட்டோம் 'தமிழ்' என்றார்கள். உழைப் பாளிகளைக்கேட்டோம் 'தமிழ்' என்றே பதில் வந்தது. செட்டியார் நாயுடு முதலியவர்களைக்கேட்டோம் தமிழி லிருந்து பிறந்த 'தெலுங்கு' என்றார்கள். தமிழ்க் கற்றறிந் தவர்களை உங்கள் நூல்கள் எவை எனக்கேட்டோம்.

தொல்காப்பியம், திருக்குறள், பத்துப்பாட்டு, பதிற்றுப் பத்து, அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்றார்கள். பிறகு அக்ரஹாரத்திற்குச் சென்றோம் அங்கே புது ஒலியைக் கேட்டோம். அது தமிழினும் முரண்பட்டிருக்கக்கண்டோம். அங்கிருப்பவர்களை உங்கள் தாய்மொழி எது என்று கேட்டோம். 'சமஸ்கிருதம்' என்றார்கள். பின்பு சிந்திக்கத் தொடங்கினோம். சிந்து நதிக்கரையில் பிறந்த சமஸ்கிருதம் இங்கு ஏன் வந்தது. சிந்து நதிக்கரையில் ஏற்பட்ட ஆரியருக்குரிய நான்கு வேதங்கள் திராவிட நாட்டிற்கு வருவானேன்? தமிழல்லாத ஆரிய மொழியில் எழுதப்பட்ட வேத, இதிகாச, ஸ்மிருதி புராண உபநிஷத்துக்கள் திராவிட நாட்டில் ஓதப்படுவானேன்? என்று கேட்டறிந்த பின்தான் அக்ரஹாரத்து வாசிகள் ஆரியர்களெனத் தெரிந்துகொண்டோம்

நமக்குரிய ஆனால் நம்மால் மறக்கப்பட்டிருக்கும் திராவிடம் தனி நாடாகத்தான் இலங்கி வந்தது என்பதற்கு இலக்கியச் சான்றுகள் பல காட்டமுடியும். இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய தொல்காப்பியத்தின் சிறப்புப்பாயிரத்தில் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத், தமிழ் கூறு நல்லுலகம்" என்று கூறப்பட்டிருப்பதால் வடக்கே வேங்கட மலையையும், தெற்கே குமரியாற்றையும் கிழக்கேயும் மேற்கேயும் கடல்களையும் எல்லையாகவுடையதாக இருந்தது தமிழகம் என அறிகிறோம். காக்கைப்பாடினியார் என்ற புலவரும் 'வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும், வேங்கடங் குமரித்தீம்புனற் பௌவமென, இந்நான்கெல்லை அக்வயிற்கிடந்த, நூலதின் முறைமைய வாலிதின் விரிப்பின்" என்று அதே எல்லைக்கோட்டைக் குறிப்பிடுவது காணலாம். இளங்கோவடிகள் கூட தாம் எழுதிய சிலப்பதிகாரத்தில் "நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமும், தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாடு" என்று குறிப்பிடுவதும் திராவிடம் தனியே

இலங்கி வந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாகும். அவரே "குமரி வேங்கடம் குண குட கடலா, மண்டிணி மருங்கிற் றண்டமிழ் வரைப்பு," எனறம் வேறோர் இடத்தில் கூறு கின்றார். 'வரைப்பு' என்றால் எல்லை என்று பொருள். ஆகவே நமது தேசியத் தோழர்கள் கூறுவது போன்று 'இந்தியா என்று யாரும் கூறவில்லை. தமிழ் கூறு நல்லுல கத்தைத் தனித்துதான் கூறி வந்தார்கள். கருவூர் கதப் பிள்ளைச் சாத்தனார் என்ற புலவரும் "இமிழ் கடல் வரைப் பில் தமிழகங் கேட்ப" என்று தான் கூறினார். எனவே திராவிடம் எனத் திரிந்து வழங்கும் தமிழகம் திராவிடர்க் குரிய நாடாக இருந்து வந்ததென்பதை ஏடுகள் எடுத்துக் கூற அறிகிறோம்.

திராவிடர்க்குரிய திராவிடநாட்டில் ஆரியமொழியைத் தாய் மொழியாகக்கொண்டு ஆரிய வேதம் ஓதி ஆரிய நாக ரீகத்தைக் கடைப்பிடித்துவரும் அக்ரஹார வாசிகளாகிய பார்ப்பனர்களை நாம் ஆரியர் என்று சொல்லாமல் எப்படித் திராவிடர் என்று ஒப்புக்கொள்ள முடியும். ஆகவே தான் பார்ப்பனர்களை ஆரியர்கள் என்கிறோம். அவர்களிடத் திலே ஆரிய இன உணர்ச்சி இன்றும இருக்கக்காணலாம். சி. பியும், சி. ஆ. ரும், டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியாரும் சிவசாமி அய்யரும், சீனிவாச சாஸ்திரியாரும், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் தங்களுக்குள் கருத்து வேறுபாடு இருப்பினும் ஒருவரை ஒருவர் உயர்த்தியே கூறுவதன் நோக்கம் இன உணர்ச்சியன்றி வேறு எதுவாகும். ஒவ் வொரு பள்ளியிலும், கல்லூரியிலும் சமஸ்கிருத வகுப்பு உண்டு அங்கே சமஸ்கிருதம் பிரிய பாடமாகச் சொல்லிக் கொடுக்கப்படுகின்றது. 'அந்த வகுப்பில் உள்ள மாணவர் கள் எல்லோரும் பார்ப்பனர்கள். அவரையன்றி மற்றை யோர் அம்மொழியைக் கற்பதில்லை. சமஸ்கிருத மொழி அரசியலுக்குப் பயன்படுகின்றதா என்றால் இல்லை. அப் படியிருந்தும் பார்ப்பனர்கள் மட்டும் அந்த மொழியைக் கொள்வானேன். காரணம் அது ஆரிய மொழி. பார்ப்

பனர்கள் ஆரியர்கள். ஆகவே அதனைப் பயிலுகிறார்கள். இதுவன்றி வேறு எக்காரணம்பற்றி அந்த ஒரு கூட்டம் மட்டும் செத்த மொழியைப் பயில விரும்புகின்றது. அக் கூட்டம் வடமொழியை விருப்பும் அளவுக்குத் தமிழை விரும்புவதில்லை. விரும்புவதில்லை என்பதுமட்டுமல்ல வெறுக்கவுஞ்செய்கிறது. எனவே பார்ப்பனர்கள் ஆரியர் கள், திராவிட நாட்டிற்குறியவரல்லர் என்று கூறுவதிலே என்ன தவறு. இதை எந்த தேசியத் தோழராவது இல்லை என்று மறுத்துக்கூற முன் வருவாரா? உண்மை இவ்வா றிருக்க ஆரிய மொழி பேசி காய்ந்த தர்ப்பையை ஆட்டு வோருக்கு திராவிடர்களாகிய நாம் தலை வணங்க நேரிட்ட தேன், சேர, சோழ, பாண்டியர்களைத் தோற்றுவித்த ஒரு இனம், இமயமலையில் முக்கொடியினைப் பொறித்த ஒரு இனம், உலகுடன் வாணிபம் நடாத்திய ஒரு இனம் இன்று ஒரு தெரு வழியே நடக்கக் கூடாதென்றால், கோவிலுக்குள் நுழையக்கூடாது என்றால், ஒரு குறிப்பிட்ட பானை நீரைக் குடிக்கக்கூடாதென்றால், இந்நாட்டில் ஆட்சி செலுத்துவது ஆரிய தர்மத்தின் ஒரு கூறு என்று சொல்லாமல் ஆங்கிலே யந்தான் என்று எப்படிக் கூறமுடியும். ஏனென்றால் பிரித் தானியாவிலுள்ள ஆங்கில சட்டத்தில் ஜாதிக்கொரு நீதி கிடையாது. ஜாதிக்கொரு நீதி கூறுவது மனுதர்ம சாஸ் திரம். பெரியார் இராமசாமி அவர்கள் சொல்லுவதுபோல் இந்த நாட்டை ஆளுவது ஆங்கிலேய—ஆரிய ஒப்பந்த ஆட்சியாகும்.

இந்த நாட்டில் ஆளப்பிறந்தவன் இந்த நாட்டிற்கு வந்து குடியேறிய ஒருவனால் நாயினும் கீழாகப் நடத்தப் படுவதை நாங்கள் எடுத்துக்கூறினால் எங்களைப் பார்ப்பன விரோதிகள், வகுப்பு வாதிகள் என்று தேசியப் பத்தி ரிக்கைகள் கதறுகின்றன. ஒற்றுமை வேண்டும் என்று கூக்குரலிடுபவர்களிடத்திலே, வேற்றுமையுணர்ச்சி இருப் பானேன்? இருக்கலாமா? B. A., M. A., முதலிய பட்டக் கல்வி படித்த பார்ப்பனர்கள் தங்களைத் தனியாகப் பிரித்துக் காண்பிக்கவேண்டுமென்று ஏன் எண்ணுகின்றனர்.

அவர்களுக்கெல்லாம் எதற்காக பூணூல்? பார்ப்பன வகுப்பை ஆரிய இனத்தைப் பிரித்துக் காண்பிப்பதற்குத் தானே பூணூல் பயன்படுகின்றது. திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் படிக்கும் பார்ப்பன மாணவர்களுக்கு எதற்காக பூணூல்? பேராசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் எதற்காக பூனூல்? மந்திரிகளுக்குப் பூணூல் ஏன்? பார்ப்பன நீதிபதிகளுக்கும், வக்கீல்களுக்கும், டாக்டர்களுக்கும் பூணூல் ஏன்? நாட்டின் நிலையுணர்ந்த பத்திரிக்கை ஆசிரியர்களின் தோளின்மேல் பூணூல் தவளு வானேன்? பார்ப்பனர்களால் வைக்கப்படும் காபி கிளப்பு களுக்குப் 'பிராமணாள் காபி கிளப்' என்று 'பிராமணாள்' என்ற அடை மொழியோடு போடுவானேன். இவ்வா றெல்லாம் இருப்பதும், நடை முறையில் விடாமல் கைக் கொண்டு வருவதும் வகுப்பு வாதமல்லவா? வகுப்பு வாதத்தை நடை முறையில் நடத்திக்கொண்டு வருபவன் வகுப்பு வாதியா, அவையெல்லாம் அழிக்கப்படவேண்டும் மாற்றப்படவேண்டும் என்று எடுத்துக்கூறுபவன் வகுப்பு வாதியா? சென்ற ஆண்டு அறிஞர் G. D நாயுடு அவர்கள் பங்களாவில் எழுத்தாளர் மாநாடு ஒன்று நடந்தது. வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் பார்ப்பனர்கள். அவர்கள் ஒவ்வொருவர் தோளிலும் பூணூல் காணப்பட்டது. எழுதுகோல் பிடித்த அந்த வீரர்களுக்கு பூணூல் எதற்காக இருக்கவேண்டும். இத்தகைய சூதும், கொடுமையும், நீங்கவேண்டுமென்று நாங்கள் கூறினால். நாங்கள் தேசத் துரோகிகளா? வட துருவத்திலிருந்து தென் துருவம்வரை நோக்கும் பரந்த நோக்கமுடையவர்களுக்கு இது ஏன் புலப் படவில்லை. தங்களைத் தனியே பிரித்துக்கொண்டு அதனைக் காப்பாற்றுதற்கேற்ற முறையில் சட்டங்களை வகுத்துக் கொண்டு இந்நாட்டு மதம், கலை, வர்ணாச்சிரமம், கோயில், கலாசாரம் ஆகியவைகளில் வெள்ளையர் தலையிடக் கூடாது என்று விக்டோரியா மகாராணியாரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்தப்படி இதுகாறும் ஆங்கிலேய-ஆரிய ஒப்பந்த ஆட்சி நடைபெற்று வருகின்றது. இன்னும்

கொஞ்சம் தெளிவாக கூறவேண்டுமானால் பெரியார் இராமசாமி அவர்கள் கூறுவதுபோல வெள்ளை நிற ஆங்கிலேயனும் தவுட்டுநிற ஆரியனும் சேர்ந்து செய்து கொண்ட ஒப்பந்த ஆட்சிதான் நம்மை ஆளுகின்றது.

நம்மை இன்று ஆளுவது 'ஹிந்து-லா'; 'பிரிட்டிஷ்-லா' அல்ல. ஹிந்து-லா மனுஸ்மிருதியைத் தழுவியது. மனுஸ்மிருதி சாதிக்கொரு நீதி கூறும் ஆரிய ஏடு. இதை யாரேனும் மறுக்க முடியுமா? இந்த நாட்டை ஆரியம் ஆட்சி செய்கின்றது என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் காட்டமுடியும். நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள், பாலக்காட்டுக்கருகில் ஒரு சிற்றூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை. அந்த ஊர் குளத்தில் இரண்டு ஈழவர்கள் குளித்து விட்டனர் ஈழவர்கள் மலையாளத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஈழவர்கள் குளத்தில் இறங்கியது குற்றம் என்று அங்கிருந்த சாஸ்திரிகள் வழக்குத் தொடுத்தனர். கீழ்க்கோர்ட்டில் குளம் பொதுவானதால் யாவரும் குளிக்கலாம் என்று தீர்ப்பு கூறப்பட்டது. உடனே சாஸ்திரிகள் மேல்கோர்ட்டுக்கு வழக்கு தொடுத்தனர். அங்கிருந்த நீதிபதி ஒரு அய்யர். கோவிலில் நுழைய உரிமையற்ற ஈழவர்கள் குளத்தில் குளிக்கவும் உரிமையற்றவர்கள், ஆகவே குளத்தில் குளித்ததற்காக அபராதம் செலுத்த வேண்டியதோடு சாஸ்திரிகளுக்கு ஏற்பட்ட செலவையும், குளம் தீட்டுப்பட்டு விட்டதால் அதனை சுத்தி செய்வதற்கு யாகம் செய்வதற்கான செலவையும் அந்த ஈழவர்கள் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது. இப்பொழுது கூறுங்கள் இந்த நாட்டில் நிலவுவது ஆங்கிலச் சட்டமா? அல்லது ஆரியச் சட்டமா? என்று. ஆங்கிலச் சட்டம் காரணமாகவா ஈழவர்கள் குளத்தில் இறங்கக்கூடாது என்றும், யாகம் செய்யப் பணம் கொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது? நீங்கள் நன்கு சிந்தித்துப்பார்க்கவேண்டும். லால்குடியில் பார்ப்பான் குளம் என்று ஒரு குளம் உள்ளது. அக்குளத்தில் பார்ப்பனர்

மட்டுமே குளிக்க வேண்டும் வேறுயாரும் இறங்கக்கூடாது என்பதற்காகப் பார்ப்பனர்கள் வழக்குத் தொடுத்தனர். கீழ்க்கோர்ட்டில் நீதிபதி ஒரு திராவிடரானதால் 'பொதுக் குளத்தில் யாவரும் குளிக்கலாம்' என்று இரண்டு மூன்று நாட்களுக்கு முன் தீர்ப்புக் கூறினர். குளம்வெட்ட நம் தோழர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட உழைத்திருப்பார்கள். எந்தப் பார்ப்பனனாவது ஒரு சொட்டு வியர்வை குளம் வெட்டுவதற்கென்று சிந்தியிருப்பானு? கரையான் புற்றெடுக்கக் கருநாகம் குடியிருக்கிறது. சட்டம் அனுமதிக்கிறது இத்தகைய கொடிய சட்டம் அளித்த தீர்ப்பிற்கு எத்தனை உதாரணங்கள் வேண்டும். ஆந்திர நாட்டில் ஒரு பிராமணன் ஒரு பிராமணப் பெண்ணையும், பின் ஒரு நாயுடு பெண்ணையும், மணந்தான். அந்த பார்ப்பான் இறந்த பிறகு அவனுடைய சொத்து யாரைச்சேர்வது என்று தகராறு ஏற்பட்டது. வழக்குத் தொடரப்பட்டது. படிப்படியாக உயர்நீதி மன்றத்திற்கு வந்தது. நீதிபதி சந்திரசேகர அய்யர் என்பவர். நாயுடு பெண்ணிற்குச் சொத்தில் பங்கு கிடையாது என்றும் பார்ப்பனப் பெண்ணிற்குத்தான் சொத்துரிமை உண்டென்றும் தீர்ப்பளித்தார். இந்த நீதி காந்தியார் போற்றும் மனுஸ்மிருதியில் கண்டபடி தான் அளிக்கப்பட்டது. 'எந்த பார்ப்பனனாவது பார்ப்பனரல்லாத பெண்ணை மணந்து கொண்டால் அந்தப் பெண்ணுக்கு அவன் சொத்தில் உரிமை இல்லை. எந்த பார்ப்பனரல்லாதவனாவது பார்ப்பனப் பெண்ணை மணந்து கொண்டால் அவன் சொத்திலே அந்தப் பெண்ணுக்கு உரிமையுண்டு.' என்று மனுஸ்மிருதி கூறுகின்றது.) சுயராஜ்யம் வந்தால் எல்லாம் சரியாய் போய்விடும் என்று சொல்லுகிறார்கள் தேசீயத் தோழர்கள். நாங்கள் கேட்கிறோம் இது ஆங்கிலச்சட்டமாகுமா? இந்த நீதியை ஆங்கிலேயனா உற்பத்தி செய்தான்? ஆங்கிலேயன் வருவதற்கு முன்னமே இக்கொடுமைகள் இல்லையா? ஈராயிரம் ஆண்டுகளாக உள்ள கொடுமையல்லவா இது! ஒரு சாரார் சேரியில் சதுப்பு நிலத்தில் வாட, மற்ெருரு சாரார் உண்டு,

உறிஞ்சி, உப்பி, உல்லாச நகரங்களில் இருக்கவேண்டும் என்று வெள்ளையனு கூறுகின்றான்? குச்சி வீடுகளில் வாழ ஒரு சாராரும் பச்சு வீடுகளில் வாழ மற்றொரு வகுப்பாரும் இருக்கவேண்டும் என்ற முறையை எதிர்த்தல் வெள்ளைக் காரனு தடுக்கிறான்? நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாடு பட்டால் வெள்ளையன் தடுப்பானு? கடவுளைப் பார்ப்பான் அல்லாத ஏனையோர் தொட்டால் வெள்ளைக்காரன் தடுப் பானு? வெள்ளையன் இருக்கும் போதே இந்நிலையில் இருந் தால் 'சுயராஜ்யம்' வந்தால் எப்படி இருக்கும்! எங்களுக் குத் தெரியுமே எப்படி இருக்கும் என்று! இரண்டரை ஆண்டுகள் ஆண்டு காட்டினார்களே. பாராளும் மன்றம் பஜனைக் கூடமாக மாறும். ஆரியர்களுக்குச் சலுகை காட் டப்படும். ஆசாரி, ஆச்சாரி என்று போட்டுக் கொள்ளக் கூடாது என்ற சட்டம் பிறக்கும். திராவிடரை அடிமைப் படுத்த இந்தி வரும். வரிகள் ஏறும். இவற்றையெல்லாம் 'மாடல் சுயராஜ்யத்தில்' நாம் கண்டோமே! எனவேதான் ஆரிய-ஆங்கிலேய ஒப்பந்த ஆட்சி ஒழிக்கப்பட்டுத் தனித் திராவிடர் ஆட்சி நிறுவப்படவேண்டும் என்கிறோம்.

தேசியத் தோழனே! நீ சொல்லுகிறாய் வெள்ளையன் இந்நாட்டினின்றும் போய்விட வேண்டுமென்று. நாங்கள் வெள்ளையன் இங்கேயே இருக்கவேண்டும் என்று ஒருபோ தும் சொன்னதில்லை. வெள்ளையனோடு வேதியக் கூட்ட மும் போகட்டும் என்று தான் சொல்லுகிறோம். (வெள் ளையனோடு குலாவி வெள்ளையன் சலுகையை பெறுவது நீயா, நாஙகளா? கவர்னர், வைசிராய் போன்ற ஆங்கிலே யர்களுடன் அடிக்கடி நீ தானே கை குலுக்குகிறாய். எங் கள் தலைவர் பெரியார் இராமசாமி ஆவது வெள்ளையனிடம் கைகுலுக்க விரும்பியதுண்டா இதைச் சொன்னால் உனக்குக் கை குலுக்குவதற்கேற்ற 'அந்தஸ்து' ஏது என்று கூறுவாய். அதே சமயத்தில் கூறுகின்றாய் வெள்ளையருடன் உறவாடுபவர்கள் நாங்கள் என்று. முரண்பட்ட இரண்டிலே எது பொருந்தும். நமது தேசியத் தோழர்கள் திராவிட கழகத்தையும், முஸ்

லிம் லீக்கையும் ஏற்படுத்தித் தூண்டிவருவது வெள்ளைக்காரன் தான் என்றும் இதுபோன்ற கட்சிகளினால் தான் 'சுயராஜ்யம்' வரவில்லை என்றும் கூறுகிறார்கள். முஸ்லிம்களுக்கு உணர்ச்சியை ஊட்டியவர் தோழர் ஜின்னா ஒரு காலத்தில் காங்கிரசில் இருந்தவர் தான். தாழ்த்தப்பட்ட தோழர்களை ஒன்று திரட்டியது தோழர் டாக்டர் அம்பேத்கார் ஒரு காலத்தில் காங்கிரஸில் இருந்து பிறகு காந்தியாரின் உயிரைக் காப்பாற்றியவர் தான். பெரியார் ஜஸ்டிஸ் கட்சியைக் கைப்பற்றி, மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டித் திராவிடக்கழகமாக மாற்றினார். அவரும் ஒரு காலத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தவர் தான். ஆனால் அம்மூவராலும் ஆரம்பிக்கப்பட்ட இயக்கங்கள் அவர்களாலே அன்றி எந்த வெள்ளைக்காரனாலும் ஆரம்பிக்கப்பட்டதல்ல. பெரியார் அவர்கள் சுட்டிக்காட்டுவதுபோல் காங்கிரஸ்தான் 1885-ம் ஆண்டு 'ஹ்யூம்' என்ற வெள்ளையனால் ஆரம்பிக்கப்பட்டது. I. C. S பட்டம் பெறவும், இந்தியனுக்கும் வேலையில் பங்கு வேண்டும் என பாடுபடவும் வெள்ளையனால் துவக்கி வைக்கப்பட்டது. இத்தகைய நிலையில் உள்ள இவர்கள் நம்மை ஏகாதிபத்திய தாசர்கள் என்று கூறுகிறார்கள். அவர்கள் பத்திரிகை பலங்கொண்டு மக்களை நம்பும்படி செய்கிறார்கள். இதற்குக் காரணம் எதையும் நம்புவதற்கு மக்கள் இருப்பதல்லாமல் வேறு என்ன. இத்தகைய மடமை மக்களினின்றும் நீங்கி சிந்தித்துச் சீர்தூக்கிப்பார்க்கும் நிலைமை ஏற்படத்தான் திராவிடக்கழகம் பாடுபடுகிறது.

அரசியலைப் பொருத்த வரையில் நம் நாடு அடிமைப்படுவானேன்? இங்கிலாந்தில் கி.மு. 51-ல் ஜூலியஸ் படையெடுத்த பிறகு வேறுயாரும் படையெடுக்க வில்லை என்று பெருமையாகப் பேசிக்கொள்கிறார்கள். டேனர்கள் படையெடுத்தார்கள் ஆனால் அவர்கள் ஆட்சிநீடிக்கவில்லை. இங்கு நமது மதிப்பிற்குரியதோழர் C.N. அண்ணதுரை அவர்கள் கூறுவது போன்று, நமது சரித்திரத்தில் வந்தான், வந்தான் என்று இருக்கிறதேயொழிய இங்கிருந்து சென்றான் வென்

ருன் என்றில்லை! பாரதத்தாய் வாழும் நாடு! ஆண்டவன் அடிக்கடி வந்து அருள் பாலிக்கும் நாடு! கணக்கற்ற கடவுளர்களுக்கு காணிக்கை செலுத்தி வரப்பிரசாதம் பெறும் நாடு! இப்பேர்பட்ட நாட்டின்மேல் அலக்ஸாண்டர் படைஎடுப்பானேன்? பாபர், தைமூர், கோரி, கஜினி படையெடுப்பானேன்; போர்த்துக்கீசியர்கள் வருவானேன்? டச்சுக்காரன் வந்திறங்குவானேன்? பிரெஞ்சுக்காரன் முற்றுகையிடுவானேன்? இறுதியில் நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்படுவானேன்? நாட்டைப் பொறுத்தவரையில் மராட்டிய ஆதிக்கம் ஏற்படுவதற்குமுன் திராவிடம் தன்னாட்சி கொண்டுதான் விளங்கியது. ஏற்பட்ட பூசல்களும், மாறுதல்களும் வடக்கில்தான். இவைகளை விட்டுவிட்டோமானாலும் வெள்ளையன் எப்படி என் நுழைந்தான் என்பதை அறிய வேண்டியதவசியம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நாட்டில் நிலை நாட்டப்படுவதற்கு மூலகாரணமாக இருந்தது. பிளாசி சண்டையும் ராபர்ட் கிளைவுந்தான். இங்கிலாந்தில் போக்கிரி என்று அழைக்கப்பட்ட ராபர்ட் கிளைவ், உதவாக்கரை என்று தள்ளப்பட்ட ராபர்ட் கிளைவ், சோப்பும் சீப்பும், கண்ணாடியும் விற்கவந்த ராபர்ட் கிளைவ், குமாஸ்தாவாக இருந்த ராபர்ட் கிளைவ் பிளாசி சண்டையில் வென்றான் என்றால், வீரமக்கள் உள்ள நாட்டில் அது எப்படி முடிந்தது? அதற்காகத்தான் திராவிட மாணவர்களை நாங்கள் சரித்திரத்தைப் புரட்டுங்கள், உண்மையை உணருங்கள் என்று கூறுகிறோம். டில்லியில் சுராஜ் உத் தௌலா ஆண்டுவந்தான் மீர்ஜாபர் அவன் அமைச்சன் டில்லி சுல்த்தானின் படைக்கும், கிளைவின் படைக்கும் பிளாசியில் போர் மூண்டது. கிளைவும் மீர்ஜாபரும் சதி செய்ய இடையில் தூது சென்று கிளைவிற்கு நாட்டைக் காட்டிக்கொடுத்தவன் 'ஓமிசந்த்' என்ற ஒரு பார்ப்பனன். பிளாசிச் சண்டையும், மூன்று பானிபட் யுத்தங்களும் மாறி இருக்குமேயானால் இந்நாட்டுச் சரித்திரமே மாறியிருக்கும். ஒரு ஹிட்லர், ஒரு முசோலினி இவர்களால் நாட்டின் சரித்திரம் மாற்றி அமைக்க முடிவதுபோல் இங்கு ஒரு நாடு 'ஓமிசந்த்' என்ற

ஒரு பார்ப்பனுல் காட்டிக் கொடுக்கப்பட்டது. இரண்டு லக்ஷம் பவுன் தரகு பேசிக்கொண்டு உளவுகளைச் சொல்ல இணங்கினுன் ஓமிசந்த். அதனுல்தான் கிளைவ் தன் சிறிய சேனையைக்கொண்டு பெரிய படையைத் தோற்கடிக்க முடிந்தது. கிளைவ் ஓமிசந்த்ற்கு இரண்டுலக்ஷம் பவுன் தருவதாக சிகப்புக் கடிதத்தில் எழுதி வேருெரு அதிகாரியின் கையெழுத்தைத் தானே போட்டுக் கொடுத்தான். சிகப்புக் காகிதத்தில் எழுதிய அந்த பத்திரம் ஆங்கிலச் சட்டப்படி செல்லாது. இறுதியில் கிளைவ் அவனுக்குப் பெரியதொரு "நாமத்தைப்" போட்டான் என்றும் கூறப்படுகிறது. இப்படி ஆரிய இனம் ஒரு முறை மட்டும் நாட்டைக் காட்டிக் கொடுக்கவில்லை. வரலாற்றின் முக்கிய கட்டங்களிலெல்லாம் காட்டிக்கொடுத்தே வந்திருக்கிறது. மகதத்தில் நவதந்தர்கள் ஆண்டுவந்தார்கள். அச்சமயம் அலெக்சாந்தர் படையெடுத்து வந்தான். அப்போது அவனை மகதத்தின் மீது படையெடுக்க வேண்டியதோடு, மகத நாட்டைக் காட்டிக் கொடுக்க முற்பட்டான் சாணக்கியன் என்னும் பார்ப்பனன். அலெக்சாந்தரும் வரும் வழியில் சீலம், சினப் நதிகளுக்கிடையில் போரஸ் மன்னனைப் போரில் வென்றுன். ஆனுல் கிரேக்கப் போர்வீரர்கள் தங்கள் தாய் நாட்டிற்குத் திரும்ப வேண்டுமெனக் கூறியதால் அத்துடன் அலெக்சாந்தர் மகதத்தின்மேல் பாயாமல் தன் நாடு திரும்பினுன் அதே சாணக்கியன், கடைசி நந்த அரசனைக்கொன்று சந்திரகுப்த மௌரியனுக்குப்பட்டம் சூட்டி அவனுக்குத்தான் அமைச்சனுனன். அர்த்த சாஸ்திரம் என்னும் ஆரியச் சட்ட நூலை இயற்றியவனும் அவனே. அசோகனுடைய பேரசு அழிவதற்குக் காரணமாக இருந்தவர்களும் ஆரியரேயாகும். அசோகன் பௌத்த மதத்தை ஆதரித்தான். அம்மதத்தின் கொள்கைகள், உலகத்தில் இல்லாததை எண்ணி, எண்ணி வீண் போகாதே என்பதும், தெரியாத உலகைப்பற்றிக் கவலைப்படாதே என்பதும், ஆசையை வெறுத்து அன்பைக் கைக்கொள்ளவேண்டும் என்பதுமாகும். — பௌத்த மதத்தைச் சேர்ந்தவர் ஆரியர் செய்வதைத் தடுத்தனர் இவற்றை

ஆரியத்தால் பொறுக்க முடியவில்லை. எதையும் வஞ்சத்தால் எதிர்க்க ஆரியர் துணிவு கொண்டனர். அக்காலத்தில் அரசர்கள் கூட பார்ப்பனர்களுக்குப் பயந்துகொண்டு அவர்களுக்குமட்டும் பொருள் வழங்கிவந்தார்கள். ஆனால் பௌத்த மதத்தைச் சேர்ந்த ஹார்ஷர் பார்ப்பனன், பார்ப்பனனல்லாதான் என்ற வேறுபாடு கருதாது எல்லோருக்கும் பொருள் கொடுத்து வந்தார். இதன் காரணமாகப் பார்ப்பனர் ஒன்று கூடி ஹார்ஷரைக் கொல்ல சூழ்ச்சி செய்தனர். ஆனால் இதுபற்றிய செய்தி ஹார்ஷருக்குத் தெரியவரவே ஐந்நூறு பார்ப்பனர்கள் நாடு கடத்தப்பட்டனர். The Menace of Hindu Imperialism என்ற நூலில் கூறியபடி ஹார்ஷர் கடைசி நாட்களில் ஆரிய வஞ்சகர்களால் கொல்லப்பட்டார்.

சிவாஜியைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அஞ்சா நெஞ்சம் படைத்த வீரன். சுல்தான்களுக்கு எதிராகப் போரிட்டு கல்யாண், புரந்தர் முதலிய கோட்டைகளை முற்றுகையிட்டு அவற்றைப் பிடித்த தீரன். எதிர்த்த மாவீரர்களின் தலைகளை மலைமலையாகக்குவித்தான். போர்க்களங்களை இரத்தக்களமாக ஆக்கினான். பகைவரை நடுங்கும்படிச் செய்தான். வெற்றிகொண்ட மராட்டிய வீரன் நாட்டுக்கு அரசனாக ஆசைப்பட்டான் ஆனால்வேதியர்கூட்டம், சிவாஜி சூத்திரன் ஆனதால் அரசனாவதற்கு அருகதையபற்றவன் என்றது. சிந்தித்தான சிவாஜி கர்ஜித்தான் ஆண்மையைச்செலவழித்தேன்! வீரச்செயல்கள் புரிந்தேன்! பகைவரை நடுங்கும்படிச்செய்தேன்! நான் ஆளுவதற்கு உரிமையில்லையா? என்னை யார் தடை செய்ய முடியும்? எனப்பலவாருக எண்ணினான். ஆனால் பார்ப்பனர்களின் எதிர்ப்பு எத்தன்மையது என்றறிந்து அஞ்சினான். வீரத்தை நிலைநாட்டிய வீரன் கடைசியில் கலங்கி கங்குப்பட்டர் காலடியில் வீழ்ந்தான்! வீழ்ந்தபிறகு வேதியர் கூட்டம் சிவாஜியை க்ஷத்திரியன் ஆக்கியது. தன் நிறை அளவு பொன்னையும் மணியையும் அதற்குமேற்பட்ட பொருள்களையும் பார்ப்பனர்களுக்கு யாகம் செய்ய வாரி வாரி இறைத்தான்

பதினோராயித்துக்கு மேற்பட்ட பார்ப்பனர்கள் கங்கைக் கரையிலிருந்து வரவழைக்கப்பட்டனர் யாகம்செய்ய. இவை யனைத்தையும் மிக அழகாக தோழர் C. N. அண்ணதுரை அவர்கள் தமது 'சிவாஜிகண்ட இந்து ராஜ்யத்தில்' சித்தரித் துக்காட்டினார். இக்காலத்திலேயே ராஜாசர். அண்ணமலைச் செட்டியார் ஷஷ்டியப்த பூர்த்திக்கு அறுபது பார்ப்பனர் களுக்கு வீடுவாசல் பொருள்கள் தானம் செய்தார் என்றால் சிவாஜி அக்காலத்தில் ஏன்கொடுத்திருக்க மாட்டான்? சிவாஜியின் பொருள் வளம் பார்ப்பனர்களுக்குக் கொடுத்த தால் குன்றியது. கடைசியாக சிவாஜி பொக்கிஷத்தைத் திறந்து பார்க்க காலியாக இருந்தது. போர் புரிந்த வீரர் களுக்குப் பொருளை அள்ளிக்கொடுக்காது பார்ப்பனர்களுக் கொடுத்து வீணாக்கினோமே என்று எண்ணி, எண்ணி ஏங் கியே இறந்தான். சிவாஜிக்குப்பின் சாம்பாஜி பார்ப்பன பீஷ் வாக்களிடம் அதிகாரத்தை விட்டுவிட்டு அடிபணிந்தான். இறுதியில் அழிந்தான் மாற்சரியங் கொண்ட மராட்டியம் ஆரியத்தால் அழிக்கப்பட்டது. ஆரியத்தின் ஆணவச்சிரிப்பு அத்துடன் நின்றுவிடவில்லை.

நாலந்தா என்ற பல்கலைக்கழகம் ஆரியத்தினாலேயே அழிக்கப்பட்டது. இது நாம் கூறுவதல்ல சீன யாத்திரி கரின் குறிப்பில் காணப்படுவது. அது பௌத்தரின் பல் கலைக்கழகம். அங்கே பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பயின்றனர் ஆயிரக்கணக்கான விரிவுரையாளர்கள் இருந்தனர். இன்னும் மாணவர்கள் வாழ்ந்த விடுதிகள் இடிந்து காணப்படுகின்றன. மாணவர்களிடையே ஆசிரியர் கள் வாழ்ந்துவந்தனர் என்பதும் காணக்கிடக்கின்றது. அப் பேர்பட்ட பல்கலைக்கழகம் ஆரியர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது, அங்கிருந்த நூல் நிலையம் சாம்பலாக் கப்பட்டது. பல வீடுகள் எரிக்கப்பட்டன. ஆரியம் இதனைச் செய்து அகமகிழ்ந்தது.

அலெக்ஸாண்டர் படையெடுப்பிலிருந்து ஆங்கிலேயர் படையெடுப்பு வரையிலும் ஆரியம் நாட்டைக் காட்டிக்

கொடுத்தே வந்திருக்கின்றது இன்னும் காட்டிக் காட்டிக் கொடுத்து வருகின்றது. ஒவ்வொரு ஆபிஸுக்கும் சென்று அங்குள்ள திராவிடரைக் கேளுங்கள், உங்களை ஆரியம் காட்டிக்கொடுக்கவில்லையா என்று உண்மை வெளிப்படும். கல்லூரிகளிற்சென்று திராவிட ஆசிரியரையும் மாணவரையும் கேளுங்கள்! ஆரியத்தின் வஞ்சம் விளங்கும். ஆரியரது மனப்பான்மை இன்னும் மாறவில்லையே! சுயராஜ்யம் அடைந்ததற்குப் பிறகு பார்த்துக்கொள்வதொன்று இது? நாட்டின் நிலை மாறு பாட்டிற்கே காரணமல்லவா இது? இவற்றை எங்களைத்தவிர வேறு யார் எடுத்துரைக்கிறார்கள்!

நம் நாட்டில் நூற்றுக்குப் பத்துப் பேரே படித்தவர்களாக இருக்கக் காரணம ஆங்கில ஆட்சியா? ஓரளவுக்கு அதுவும் காரணம் என்பதை ஒப்புக்கொள்ளுவோம். உண்மையிலேயே இன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நினைத்திருந்தால கல்வியை எல்லோருக்கும் கட்டாயமாகவும் சரிசமானமாகவும் போதித்திருக்கலாம். பிரிட்டிஷார் ஆரியர்களுடன் செய்துகொண்ட விக்டோரியா சாசன ஒப்பந்ததிற்கு மாறாக எப்படி நடப்பார்கள் ஒரே பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சியில் பார்ப்பனர்கள் மட்டும் நூற்றுக்கு நூறுபேரும் படித்திருக்க மற்றவர்கள் நூற்றுக்கு ஐந்துபேர்கூட படிக்க முடியாமற் போவானேன்? நாம் கேட்கிறோம் தேசிய வாதிகளை, இந்த இருநூறு ஆண்டுகளாக உள்ள ஆங்கில ஆட்சியில் பார்ப்பனர் எல்லோரும் படிக்கவும் மற்றையோர் அந்த அளவுக்குப் படிக்காமல் இருப்பதற்கும் காரணமென்ன? இதற்கெல்லாம் காரணம் ஆரியர்கள் மட்டும் முன்னேறுவதற்கான சட்டதிட்டங்கள் அல்லவா? இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டாமா? இந்நிலை மாறவேண்டும் என்பதற்காகத்தான் ஆங்கிலேய-ஆரிய ஒப்பந்த ஆட்சி ஒழிக்கப்படவேண்டும் என்கிறோம்

அடுத்தப்படியாக இந்த நாட்டுடன் இருக்கும் வடநாட்டுத் தொடர்பு அறுக்கப்படவேண்டும் என்கிறோம். இந்நாடு வடநாட்டிற்கு அடிமைப்படவேண்டும் என்ற முறையில்

தான் வடநாட்டுத் தலைவர்கள் முயலுகின்றனர். சிலர் நாம் கூறுவதை சின்ன பிரச்சினை என்று கூறுகிறார்கள்! ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார்கள். உங்களுக்குத்தெரியும் காமராஜ், ராஜாஜி தகராறுபற்றி. அதன் முடிவும் உங்களுக்குத் தெரியும். ராஜாஜி இனி தலைவராக இலாயக்கற்றவர் என்று 'தினசரி' 'பிரசண்டவிகடன்' 'தமிழ்மணி' முதலிய பத்திரிக்கைகள் கதறின. முடிவென்ன தென்னாட்டிற்குக் காந்தியார் வந்தார் ராஜாஜி ஒரு தியாக புருஷர் என்று புகழ்ந்தார். சத்தியாக்கிரகம் தோன்றினதே ராஜாஜி வீட்டில் தான் என்றார். காந்தியார் காமராஜரைப்பற்றி ஒருவார்த்தை கூறினாரா? காந்திஜி ராஜாஜி பிரார்த்தனைக் கூட்டங்கள்! காந்திஜி ராஜாஜி சொல்லாடல்! காந்திஜி ராஜாஜி கோபால்சாமிஜி ஒன்று சேர்ந்த படங்கள். இவைகள் பத்திரிக்கைகளில் வெளியாகின்றன. காமராஜ் எங்கே? காணப்படவில்லை? பார்ப்பனரை உயர்த்தி அவர்களைக் காப்பாற்றவே வடநாட்டுக் காங்கிரஸ் பாடுபடுகின்றது. ஆகவேதான் நாம், வடநாட்டாரின் ஆதிக்கம் வேண்டாம் என்று கூறுகின்றோம். நாங்கள் கூறுவது தவறா? ஆதாரம் தருகிறோம். சென்ற வருடம் அதாவது 1945 ஆனந்த விகடன் தீபாவளி மலரில் "சுதந்திரத்திற்காக உயிர்கொடுத்த உத்தமர்களின்" படங்கள் வெளியாயிருக்கின்றன அப்படங்களில் வடநாட்டுத்தலைவர்கள் போக மீதி உள்ள தலைவர்கள் படங்கள் எல்லாம் பார்ப்பனருடையனவே. பார்ப்பனர்கள் மட்டுந்தான் தென்னாட்டுத் தியாகிகளா? விஜயராகவாச்சாரியார், ரெங்கசாமி அய்யங்கார் போன்றவர்கள்தான் தியாகிகளா? ஏ! தேசியத் தோழனே வ. உ. சிதம்பரம் பிள்ளையின் படம் எங்கே? கப்பலோட்டித் தன் பொருளையெல்லாம் வாரியிறைத்த அந்தத் தமிழன் படம் எங்கே? தடியடிபட்டு உயிர் விட்ட குமரன் படம் எங்கே? ஏன் இவர்களுடைய படம் இல்லை? காரணம் திராவிடர்கள். ஏ! தேசிய திராவிடனே உனக்கு ஏன் இன்னும் மானம் பிறக்கவில்லை.

காங்கிரஸ் பார்ப்பனர்களுக்குச் சலுகை காட்டுகின்றது என்பதற்கு எத்தனை உதாரணங்கள் வேண்டும். சர்.

கே. வி. ரெட்டி மந்திரியாக வந்தபோது "நாங்கள் குதிரைகளை அனுப்ப கழுதையை தேர்ந்தெடுத்தனர்" என்று கூறிய அதே ஆச்சாரியார் தோழர் டி. எஸ். எஸ். ராஜனைக் கொல்லைப்புறமாக கொண்டுவந்து மந்திரியாக ஆக்கினரே இதற்கு என்னபதில்? தோழர் C. N. அண்ணுதுரை அவர்கள் எழுதினதுபோல் 'கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது' திருச்செங்கோடு உயர்ந்தது, திருப்பரங்குன்றம் தாழ்ந்தது. ஆரியர் உயர்ந்தனர் திராவிடர் தாழ்ந்தனர். பார்ப்பனர் உயர்ந்தனர் அல்லாதார் தாழ்ந்தனர். இதற்கு வடநாட்டுக் காங்கிரஸ் ஆதிக்கந்தானே காரணம்.

அது மட்டுமல்லாமல் பொருளாதாரத் துறையிலும் வடநாட்டின் தொடர்பு கூடாது என்கிறோம். வடநாடு தென்னுட்டைச் சுரண்டுகின்றது தென்னுட்டின் பணம் வடநாட்டில் சென்று அடங்குகின்றது. இந்நாட்டின் வாணிபம் வடநாட்டார் கையிலுள்ளது. தோழர் அண்ணுதுரை குறிப்பிடுவது போன்று வைர வியாபாரத்திற்கு இங்கு ஒரு சுராஜ்மல்ஸ்; பவுனுக்கு ஒரு பாபாலால்; ஸ்டோர்ஸ்க்கு குப்தா ஸ்டோர்ஸ்; இரும்புக்கு டாடா; கப்பல்கட்ட வால்சந்த் ஹீராச்சந்த்; மோட்டாருக்கு பிர்லா; துணிக்குச் செல்லாராம்; பத்திரிக்கைக்கு கொயங்கா; காபி கிளப்பிற்கு ஆரியபவான் இம்மாதிரி எல்லா வாணிகத்திற்கும் வடநாடு இந்நாட்டிலுள்ள பாங்கிகளில் அநேகம் வடநாட்டாருடையன. தோழர் அண்ணுதுரை 'பணத்தோட்டம்' என்ற கட்டுரையில் இவற்றை நன்ருக விளங்கவைத்திருக்கிருர். பாரத்பாங்கு இங்கே அதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் லாபம். காம் சந்த் நினைத்தால் இங்கு ஒரு தொழில் நடத்தலாம். ஆனல் கருப்பண்ணன் செட்டியாரால் அங்கு சென்று ஏதாவது செய்யமுடியுமா? நமது பணத்தில் ஒரு பாகம் காம் சந்துகளிடம் போகின்றன. மற்றொரு பாகம் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களால் பர்மாவில் கொண்டுபோய் முடக்கப்படுகின்றது. செட்டிமார்கள் பர்மாவில் நிலம் வாங்குகிருர்கள், வட்டிக்கடை வைக்கிருர்கள். நீங்கள் நன்ருக சிந்தித்துப் பார்க்கவேண்டும். இங்குள்ள பணம்

சேமிப்பு நிதியாக பாங்குகளின் வழியாக வடநாடு செல்வதோடுமட்டுமல்லாமல், தொழில் காரணமாகவும் வடநாடு செல்கிறது. வியாபாரத்துரையில் வடநாட்டையும், நம் நாட்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நான் சண்டைக்கு முன்பு உள்ள கணக்குப்படி கூறுகிறேன்.

| வடநாட்டில் | திராவிட நாட்டில் |
|---|---|
| சர்க்கரை ஆலைகள் | |
| 161 | 14 |
| வாசனைத்தைலம் எண்ணெய் முதலிய செய்யும் ஆலைகள். | |
| 257 | 8 |
| பெரிய இரும்பு ஆலைகள் | |
| 69 | 9 |
| இரும்பு காய்ச்சும் ஆலைகள் | |
| 11 | 2 |
| சிமிட்டி உற்பத்தி ஆலைகள் | |
| 39 | 1 |
| கண்ணாடிச் சாமான் செய்யும் ஆலைகள் | |
| 62 | 1 |
| இரயில்வே சாமான் செய்யும் ஆலைகள் | |
| 141 | 24 |
| பொது என்ஜினியரிங் சாலைகள் | |
| 305 | 21 |
| பருத்தி நூல் நூற்கும் ஆலைகள் | |
| 374 | 49 |
| ரிப்பன் முதலிய அலங்காரச் சாமான் செய்யும் இடங்கள் | |
| 103 | 7 |

| | |
|---|---|
| பட்டு ஆலைகள் | |
| 64 | 5 |
| பருத்தி ஜின்னிங் | |
| 2237 | 289 |
| ரப்பர் | |
| 24 | 6 |
| மின்சார உற்பத்தி இடங்கள் | |
| 53 | 4 |

நிலைமை இப்படி இருக்கும்போது திராவிடநாட்டின் பொருள் வளம் எப்படி மிகுதியாக முடியும். தென்னாட்டை வடநாடு சுரண்டுவதற்கு உதவியாகத்தான் வடநாட்டு காங்கிரஸ் பாடுபட்டு வருகின்றது. காந்தியார் நம்மிடம் வந்து கதர் கட்டுங்கள், கைராட்டினத்தைச் சுற்றுங்கள், குடிசைத் தொழிலை ஆதரியுங்கள் என்று கூறுவார். பம்பாயில் பிர்லா மாளிகையில் தங்கும்போது பிர்லாவிடம் கைராட்டினத்தைச் சுற்றும்படி கூறுகிறாரா? டாடா, பிர்லாவிடம் எதற்காக தொழிற்சாலைகள் அவர்கள் வைக்கவேண்டும் என்று கேட்கிறாரா? இதைப்பற்றியெல்லாம் எந்த நாணயமுள்ள மக்களிடத்து அக்கரையுள்ள தேசிய பத்திரிக்கையாவது இதுவரையில் கூறினதுண்டா?

திராவிடநாடு திராவிடர்க்கானால் இவற்றையெல்லாம் தடுக்கலாம். அப்பொழுது அரசியல் அமைப்பு இடந்தரும். நம் நாட்டார் யாராவது கராச்சி சென்று சம்பாதிக்கிறாரா? ஆனால் இங்கே கராச்சி ஸ்டோர்! மார்வாரி, மூல்தானி, இங்குவந்து கொள்ளை அடிக்கிறார்கள். நாடு நம்முடையதானால் பெரியார் கூறுவது போன்று வடநாட்டார் 'லைசென்ஸ்' பெற்றுதான் உள்ளே வரவேண்டும் என்று சட்டம் போடலாம். சென்னை பீச் ரோட்டிலுள்ள வடநாட்டு பாங்கிகளைத் தென்னாட்டு பாங்கிகளாக ஆக்க முடியும். மார்வாரி ஏழையாக நாட்டைவிட்டு கிளம்புகிறான் இங்கு

வந்து திண்டு தலையணைப்போட்டுக்கொண்டு தூங்குகிறான். திராவிடநாட்டு மக்கள் மலேயா, சிங்கப்பூர், சிலோனுக்குச் சென்று தேயிலைத் தோட்டத்தில் உழைத்து வயிறு வளர்த்து வருகிறார்கள். அவர்களைச் சொந்த நாட்டில் வாழச்செய்ய முடியாதா? வடநாட்டு பனியாக்களை இங்கிருந்து விரட்டினால் நம் தோழர்களை நமது நாட்டிற்கு வரவழைக்கமுடியும் நாம் திராவிடநாட்டைப் பிரித்தால்தான் இவற்றையெல்லாம் செய்ய இயலும். திராவிடர்நாடு திராவிடர்க்கானால் நமக்கேற்ற அரசியலை நாம் நாட்டமுடியும். வாணிபத்தில் வடநாட்டு ஏகாதிபத்தியம், அரசியலில் ஆங்கில ஏகாதிபத்யம் ஆத்மார்த்த துறையில் ஆரிய ஏகாதிபத்தியம் இம்மூன்றையும் ஒழிக்கவே திராவிட நாடு திராவிடருக்கே என்கிறோம். பரங்கி ஆட்சி, பனியா ஆட்சி, பார்ப்பன ஆட்சி ஆகிய மூன்று ஆட்சிகளும் அழிக்கப்படவேண்டும் என்பதே திராவிட கழகத்தின் திண்ணிய கொள்கையாகும்.

நாடு பிரிந்தால் நம் நாட்டில் வாழவகை யில்லையா? ஆண்மையில் சுத்தானந்த பாரதியார் கூட நம் நாட்டு வளம் பற்றி நன்கு கூறியிருக்கிறார். நமது போற்றுதலுக்குரிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் "வளமார் எமது திராவிட நாடு வாழ்க வாழ்கவே!" என்ற திராவிடநாட்டுப் பண் மூலம் நமது நாட்டின் செழுமையை அழகுற தெளிவுபடுத்தியுள்ளார் ஏனைய நாடுகளைவிட நம்நாடு பல்வளமும் பல்கியநாடு. இந்நாட்டில் என்ன வளம் இல்லை? வடநாட்டிலாவது பாலைவனம் உண்டு இங்கு அதுவும் கிடையாது. முத்துக்குளிக்கும் குமரித்துறையைப் பெற்றது நம்நாடு. கனிகள் வெட்டி எடுக்கும் சுரங்கங்களும், வற்றாத ஆறுகளும்,வளமுள்ள சோலைகளும், விளைநிலங்களும், வேய் நிறைமலைகளும் நிறைந்தது நம்நாடு. ஜப்பானின் பெரும் பகுதி எரிமலைகளால் நிரம்பியது. அந்நாடு ஆளுந்திறமை பெற்றுத் தனித்து வாழும்போது எல்லா வசதிகளும் பெற்ற நாம் திராவிடத் தனியரசு ஏன் அமைக்கமுடியாது! நம் தேசியத் தோழர்கள் நாட்டைப்பிரிக்கக் கூடாது என்

றும் இந்தியா ஒரே நாடு என்றும் கூறுகிறார்கள். பாரதத் தாய் என்று ஒன்றுள்? ஆங்கிலேயன் ஆட்சிக்கு முன்பு இந்தியா ஒன்றாக இருந்தது என்று எந்த தேசியத் தோழ ராவது சரித்திரத்திலிருந்து சான்று காட்ட முடியுமா? இல்லாததொன்றை இருப்பதாக எண்ணிக் கொள்ளுவது எப்படி பொருத்த முடையதாகும்.

திராவிட நாட்டை நாம் ஆள வகையில்லாமல் இருப்ப தற்குக் காரணம் நம்முடைய அறியாமையேயாகும். மதத் தின் பேராலும், கடவுளின் பேராலும் நம்முடைய மக்கள் மடமையாக்கப்பட்டுள்ளார்கள். மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டிய 'சுதேசமித்திரன்' வாரத்திற்கொருமுறை ஸ்தல விமர்சனம் செய்து மக்களை பெரும் பொருள் செலவழிக்கு மாறு தூண்டுகிறது. "கல்கி" எழுதுகின்றது இருபது ஆண்டுகளாகச் சுயமரியாதைக்காரர்கள் பிரசங்கம் செய்து வந்போதிலும் மாமாங்கத்திற்கு வரும் கூட்டம் அதிக மானதே ஒழிய குறையவில்லை என்றது. அந்த 'கல்கி'க்கு திருச்சி மாநாட்டிலே தோழர் சி. என். அண்ணாதுரை கொடுத்த சூடு போதும் மாமாங்கத்திற்கு மக்கள் போன தால் யாருக்கு நஷ்டம்! யார் படித்தும் படியாத முட் டாள்களானார்கள்! யார் சேற்றைப் பூசிக்கொண்டார்கள்! நாங்களா அல்லது கல்கியின வாசகர்களா? யாருக்கு இந் நாட்டில் இவற்றைப்பற்றியெல்லாம் கவலை இருக்கிறது? பத்திரிகைகள் மக்கள் அறிவுபெறும் வகையில் எடுத்துக் கூறுவதில்லை. மக்களின் பணம் பாழாக்கப்படுகிறது. கட வுளின் பேராலும், மதத்தின பேராலும், இவற்றை எந்த தேசியப்பத்திரிகை சிந்தித்தது. நூற்றிற்கு தொண்ணூறு பேருக்கு எழுத்து வாசனை இல்லை என்று கதறுகிறோம். இந்த நிலையல் 12 லக்ஷம் ரூபாயில் திருப்பதி வெங்கடாஜல பதிக்கு வைர கிரீடமா! அதற்கு வேண்டிய வைரத்திற்காக சுராஜ்மல்லிடம் 12 லக்ஷ ரூபாயையும் வாரி இறைப்பதா! அறிவு நாள் தோறும் வளர்கின்றது அமெரிக்க நாட்டிலே அறிவு வளர்ச்சியின் பயனாக அணுகுண்டைக் கண்டுபிடித்து

அணுசக்தியை உபயோகிக்கும் முறையைத் தேடுகிறார்கள். இங்குள்ள படித்த மேதாவிகளின் வேலை பயனற்ற கிரீடத்தைப் பொருட்காட்சி சாலையில் வைத்து மக்களுக்குக் காட்டுவதா? அதைப் பார்க்க நான்கு அணா டிக்கெட்டா? தேசீயப் பத்திரிகைகள் இதைப்பற்றிக் கண்டிப்பதில்லை. கடந்த ஜூன் மாதத்தில் எத்தனை மாணவர்கள் கல்லூரியில் இடமில்லை என்று அலைந்தார்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். பத்திரிகைகள் பத்திபத்தியாக எழுதின 'ஷிப்ட்' முறை கல்லூரிகளில் வேண்டுமென்று அதே சமயத்தில் 12 லக்ஷ ரூபாய் கிரீடத்தில் முடக்கப்பட்டதே! 12 லக்ஷ ரூபாயில் எத்தனை கல்லூரிகள் கட்டியிருக்கலாம்! திராவிட கழகத்தாரைத் தவிர வேறுயாருக்கு இதைப்பற்றிச் சிந்தனை எழுந்தது.

இந்த நிலையில் ஒரு தனிப்பட்ட சமுதாயம் உண்டு, உறிஞ்சி உப்பி வாழுகின்றது இந்நாட்டில். சீரங்கத்தின் கோவிலில் பாடுபட்ட மக்களது பொருள்களைப் பார்ப்பனர்கள் தானே உண்டு கொழுக்கிறார்கள். கோவில்களிலும், மடங்களிலும் எவ்வளவு சொத்துக்கள் முடக்கப்பட்டிருக்கின்றன! திருவாரூர் கோவிலுக்கு இரண்டாயிரம் வேலி நிலம்! தருமபுர ஆதீனத்திற்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட வேலிகள். நாணயமாக வழங்கப்பட வேண்டியவை குதிரை வாகனங்களாகவும், வெள்ளித் தேர்களாகவும், தங்கத்தால் உருக்கப்பட்ட பொம்மைகளாகவும் கோவில்களிலிருந்து அழிந்துபடுகின்றன. இவ்வாறு நாட்டு வளங் குன்றலாமா மக்களுக்கு அறிவிருந்தால் அழகர் வைப்பாட்டி வீட்டிற் செல்லும் சித்திரைத் திருநாள் பார்க்க மதுரைக்குச் செல்வார்களா! ஸ்ரீமுஷ்ணம் கோவிலில் உள்ள சாமியின் தங்க பூணூல் காணாமற் போய்விட்டது. வழக்கு தொடரப்பட்டது கோர்ட்டில் கோவில் அர்ச்சகரான அய்யங்கார் ஒருவர் திருடியதாக தீர்ப்பாயிற்று. உடனே அந்த அர்ச்சகன் நம்மவர்களிடம் ஓடி தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று கெஞ்சினனும். "என்னமோ தெய்வாதீனத் தீர்ப்பு. நீங்கள் மனசு வையுங்கள்" என்று அய்யங்கார் கூறினனும்.

உடனே பக்த கோடிகள் ஆளுக்கு ஐம்பது ரூபாய், நூறு ரூபாய் என்று போட்டு அந்த அர்ச்சகனைக் காப்பாற்றினார்களாம். அதே கோவிலில் அம்மன் தாலி இருமுறை அறுக்கப்பட்டு காணமற்போய்விட்டதாம். தாலியையும் பூணூலையும் பறிகொடுத்த சாமி, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள திறனில்லாத சாமி, திருட்டைக் கண்டுபிடிக்க போலீசாரைத் தானே நாடிற்று! எங்கே போயிற்று ஆண்டவன் சக்தி. இந்த ஊழல்களைப் படித்தவனும் நம்பிக்கொண்டு செய்துகொண்டுதானே இருக்கிறான். இவற்றைக் கட்டி அழுவதற்குத் தானே வாரியார்களும், கல்யாணசுந்தரங்களும், சேதுப்பிள்ளைகளும் இருக்கின்றனர். ஆகவே நாம் இவற்றில் தலையிடாமல் எங்ஙனம் புரட்சி ஏற்படுத்த இயலும். லெனின் கூறியபடி 'சிந்தனையில் புரட்சி ஏற்படாத வரையில், செயலில் புரட்சி ஏற்படமுடியாது.' வாழ்க்கையிலிலுள்ள ஊழல்களை எடுத்துச் சொல்லாமல் மக்களை எப்படித் திருத்தமுடியும். தொழிலாளர்கள் தாழ்ந்த நிலையிலிருப்பதற்குக் காரணம் பொருளாதாரம் மட்டுமா? தொழிலாளர்களைக் கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள், போன சென்மத்தில் செய்த பாவத்தினால் இந்த சென்மத்தில் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்று உண்மையிலேயே தொழிலாளியின் தாழ்ந்த நிலைக்குக் காரணம் மதமும் கடவுளுமல்லாமல் வேறு எது என்று சொல்ல முடியும். உள்ளத்தே புரட்சியை ஏற்படுத்தாமல் எங்ஙனம் புரட்சியை நடத்திக்காட்டமுடியும்.

வழக்கத்திலும், கதைகளிலும், புராண நூல்களிலும் கோவிலில் உள்ள சிவனுக்கு 'லிங்கம்' என்ற பெயர் என்று கூறப்படுகிறது. 'லிங்கம்' என்றால் என்ன பொருள் தெரியுமா? சொல்லவும் நா கூசுகிறது. அகராதியைப் புரட்டி பாருங்கள் 'லிங்கம்' என்றால் ஆண்குறி என்று பொருள் கூறப்பட்டிருக்கும். 'லிங்கம்' ஏற்பட்டதற்குப் பல புராணகதைகள் உண்டு. அதில் ஒன்று:—தாருகா வனத்திலிருந்த ரிஷி பத்தினிமாரை சிவன் மோகங்கொண்டு கற்பழித்தாராம்! பின்பு இதை உணர்ந்த ரிஷிகள் கோபங்

கொண்டு சிவனைப்பார்த்து 'பிடி சாபம்' என்றனராம். என்ன சாபங் கொடுத்தனர். தம் பத்தினிமாரைக் கற்பழிக்க சிவனின் எந்த உறுப்பு காரணமாக இருந்ததோ அந்த உறுப்பு அறுந்து விழக்கடவது என்றனராம். சாபமும் நிறைவேறியது சிவனது ஆண்குறி அறுந்து பூமியில் விழவருகின்றது. உடனே பார்த்தார் மகாவிஷ்ணு அவருடைய வேலை சிவனுக்கு ஆபத்து வந்தால் காப்பதல்லவா? சிவனது ஆண்குறி பூமியில்விழுந்தால் பூமியே அழிந்துவிடும் என்று கருதி அதைத் தாங்குவதற்கேற்ற பெண்குறி வடிவங் கொண்டு தாங்கினாராம். இதுதான் புராணங் கூறும் ஆபாச வரலாறு இந்த உருவந்தானே இன்று கோயில்களில் லிங்கமாகக் காணப்படுகிறது. அறிவுடைய மனிதன் இதை வணங்குவானா? கோயிலை மூன்று பூட்டு போட்டு பூட்டி நான்கு தடவை இழுத்துப் பார்ப்பானேன்? இத்தகைய சக்தியற்ற ஆபாசக் கடவுள்களினால் நாட்டிற்கு ஏற்படும் நன்மை என்ன? மேல் நாட்டில் நாளும் நாளும் அறிவு வளர்ந்து வாழ்க்கை வளமுறுகிறது உண்மையை அறிந்து திருந்தும் மனப்பான்மை மேல் நாட்டினருக்கு உண்டு. உலகம் தட்டை இல்லை, உருண்டை என்று கண்டார்கள். அதனை ஏற்றுக்கொண்டார்கள். இங்கு உணர மறுப்பார்கள். அப்படியே உணர்ந்தாலும் உணர்ந்தபடி நடக்கமாட்டார்கள். ஸ்ரீமுஷ்ணம் என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா! மகாவிஷ்ணு வராக அவதாரத்தில் நிலத்தை வந்து முட்டிய இடமாம் அது. ஆகவே அவ்விடத்திற்குத் திருமுட்டம் எனப்பெயரிட்டனர். அங்குள்ள பூவராகப் பெருமாளுக்கு பன்றிக்குப் பிரியமான கோரைக்கிழங்கை வைத்துப்படைக்கிறார்கள். கோரைக் கிழங்கைத் தவிர வேறொன்றும் பன்றிக்குப் பிரியமாயிற்றே அதையும் வைத்துப் படைப்பது தானே! இவற்றை யெல்லாம் அகற்றப் பாடுபடும் நிலைக்கு மக்கள் அறிவுபெறவேண்டாமா?

திராவிடநாட்டில் அரசியல், சமுதாய அமைப்புகளையே மாற்றினால் தான் நாடு நலமுறமுடியும் என்பதை நன்குணர்ந்து அதற்காக திராவிட கழகத்தார் பாடுபட முனைந்

துள்ளனர். உலகத்தோடு ஒட்ட ஒழுகவேண்டியதுதான். அமெரிக்கர் தங்கள் நாட்டை அமெரிக்கா என்று குறிப் பிடும்வரை, ஆங்கிலேயர் தங்கள் நாட்டை இங்கிலாந்து என்று அழைக்கும் வரை, திராவிடர்கள் தங்கள் நாட்டைத் 'திராவிடநாடு' என்று அழைத்துத்தான் தீருவார்கள். 'உலகத்தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்று கூறிப் பொது உடைமையைப் பரப்ப விரும்பும் ரஷ்யா கூட தன் நாட்டிற்கு ஒரு எல்லைக் கோடு வகுத்துக்கொண்டுள்ளது. பெரியார் இராமசாமி அங்கு சென்றபோது ஐந்து முறை சோதனை செய்யப்பட்டாராம். நம் நாட்டில் சுரண்டும் ஒருவன், சுரண்டப்படும் ஒருவன் என்று உள்ளவரை எங் ஙனம் நிலைமாறும். நிலைமாற வேண்டுமானால் இன எழுச்சி மக்கள் உள்ளத்தில் அரும்ப வேண்டும். ரஷ்யாவில் ரஸ் புடீன் ஆட்சி அழிக்கப்பட்ட பிறகல்லவா ஜார் ஆட்சி அழிக் கப்பட்டது. மதம் மக்களின் மது என்பதை உணர்த்திய பிறகல்லவா புரட்சி ஏற்பட்டது.

நமக்கிருக்கும் முதல் எதிரி ஆரியந்தான் நம் நாடு பிரிக்கப்படவேண்டுமென்றால் 'பாரதத் தாயை வெட்டு வதா' என்று அலறுகிறது ஆரியம். ஏ அலறுகின்ற ஆரி யமே! நீ யார்? திராவிடமக்களை தாசி, வேசி மக்களாகத் திகழவேண்டும் என்று பிரித்துவைத்த நீ! மனிதனை மனி தன் பார்க்கக் கூடாது, தொடக்கூடாது, உடனிருந்து உண்ணக்கூடாது என்று கூறும் நீ! மக்களை நான்கு வருண மாகப் பிரித்துக் காட்டும் நீ! அக்ரகாரம், சேரி என்று ஏற் படுத்திய நீ! சாப்பாட்டில் உனக்கு தனியிடம் ஒதுக்கி வைத்துக்கொள்ளும் நீ! வஞ்சகமாய் நாட்டைக் காட்டிக் கொடுத்த நீ! நாட்டைப் பிரிக்கக் கூடாது என்று கதறு கின்றாய்! பிரிக்கக்கூடாது என்று சொல்லுவதற்கு நீ யார்? பல பிரிவினைகளை வாழ்க்கையிலே ஏற்படுத்திய உனக்கு நாட்டுப் பிரிவினைகூடாது என்று கூறுவதற்கு என்ன யோக் கியதை இருக்கிறது! ரஷ்யாவும், பிரெஷ்யாவும் தமக்குரிய எல்லைக்கோடுகள் கொண்டிருக்கின்றன. போலந்தும் ஹாலந் தும் தங்கள் உரிமைகளைக் காக்க எல்லைக்கோடுகள் வகுத்

துக்கொண்டிருக்கின்றன. மனிதன் தன் அறிவின் திறத்தால் இயற்கையைப் பிளக்கின்றான் வாழ்க்கையின் வசதிக்காக தென் அமெரிக்காவினின்றும் வட அமெரிக்காவை நிலத்தை வெட்டியே பனாமா கால்வாயால் பிரித்திருக்கின்றார்கள். சூயஸ்கால்வாயும் அப்படியே ஏற்பட்டது என் நாட்டை வெட்டிப் பிரித்தார்கள்? இதைக்கண்டு அவர்களை நாட்டைத் துண்டாடுபவர்கள் என்று ஏசுவதா? அதைப் போல நாம் நிலத்தை வெட்டிப் பிரிக்கச் சொல்லவில்லை. 'திராவிட நாடு' பிரிக்கப்படவேண்டும் என்பதே, எந்த துறையிலும் உயர்வு தாழ்வு கற்பிக்காத அறிவுடைய மக்கட் சமுதாயத்தை நாட்டுக்கேற்றமுறையில் அமைக்கவேயாகும். இதைப் பொதுமக்களைவிட மாணவர்கள் உணர வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவும் கூறவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது.

தோழர் காந்தியார் துரத்தப் பட்ட இந்தியை மீண்டும் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார் இப்பொழுது. தமிழரனைவரையும் ஹிந்திகற்றுக்கொள்ளச் சொல்லுகிறார். ஹிந்தி வந்தால் யாருக்கு நன்மை ஏற்படும்? வாணிபம் நடத்த ஹிந்தி யாருக்கு உதவி செய்யும்? நமக்கா? வட நாட்டுக்காரனுக்கா? கரம் சந்துக்துக்கள் வடநாட்டுப் பொருள்களை இங்கு கொண்டுவந்து விற்பதற்கு ஹிந்தி வேண்டும். இன்று ஒரு பொன்மலைவாசி ஹிந்தி கற்றுக் கொண்டு வட நாட்டிற்குச் சென்று ஆதிக்கம் செலுத்த முடியுமா? வடநாட்டு பணியாக்கள் இங்கே வந்து குவிவதற்கு வழியேற்படும். சரக்கு போடுவதற்கு வடநாடு செல்வதை தவிர இங்குள்ளவன் வாணிபம் செய்ய வடநாடு செல்லுகிறானா? ஹிந்தியை நீங்கள் ஏன் கற்றுக்கொள்ள வேண்டும்? அது தமிழைவிடச் சிறந்ததா? அது மொழி வளம் உள்ளதா? அல்லது கலைவளம் உள்ளதா? ஆங்கிலம் கற்றால் விஞ்ஞான அறிவு வளரும். ஏன் அதனைக் கொண்டு உலகத்தையே சுற்றலாமே! ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மனி இவற்றில் ஏதேனும் ஒன்றைக் கற்றால் விஞ்ஞான அறிவோடு உலக அறிவும் பெறலாம். நியூயார்க்கில் கண்டு

பிடிக்கப்பட்ட புதுமையை, ஹிந்தி மூலமோ வடமொழி மூலமோ எப்படி உணர்வது?

நம் தாய் மொழியாகிய தமிழ் இன்று பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக இல்லை. ஐந்தாம் வகுப்புமுதல் கல்லூரி வகுப்புகள் வரை தமிழ் இன்று விருப்பப் பாடமாக உள்ளது தமிழன் வாழ்ந்த உறையூர், மதுரை, புகார், தொண்டி இன்னும் இருக்கின்றன. அவற்றைப்பற்றிய முன்னாள் செய்தி யாருக்குத் தெரியும்! தமிழ் வளர்க்கப் பாடுபடும் கரந்தை தமிழ்ச் சங்கம் பிச்சை எடுக்கின்றது. ஆனால் இந்நாட்டில் இந்தியைப் பரப்ப 36000 ரூபாய் (முபத்தாறுயிரம்) அளிக்கப்படுகின்றது. யாராவது தமிழ் வழர்ச்சிக்கென்று பெரும் பொருள் வழங்குகின்றார்களா? எல்லா நலனும் இழந்த தமிழனுக்கு மீதியிருப்பது தமிழ் தான். ஆகவே தமிழுக்கு ஊறுவிளையும்படி வேண்டாத இந்தியை மீண்டும் புகுத்த முயன்றால் பல போர்க்களங்கள் ஏற்படும என்பத மட்டும் உறுதி.

இறுதியாக எங்குந் தோன்றிவரும் கறுப்புச் சட்டைப் படையைப்பற்றி சில கூறி என் பொழிவை முடிக்க விரும்புகிறேன். கறுப்புச் சட்டைப் படை இயக்கம் வேண்டுமென்று பெரியார் அவர்கள் திருச்சி மாநாட்டில் வலியுறுத்தினர். கறுப்புச்சட்டைப் படையினரைத் திருடர்கள் என்றும், பாஸிஸ்டுகள் என றும் நமது எதிரிகள் கூறுகிறார்கள். ஏளனம் செய்கிறார்கள். கறுப்புச் சட்டை தரித்த நாம் திருடர்கள், பாஸிஸ்டுகள் என்றால் வக்கீல்கள் அத்தனை பேரும் திருடர்கள், பாஸிஸ்டுகள் ஆகவேண்டும். நீதிபதிகள் யாவரும் திருடர்கள் ஆகவேண்டும் பட்டம் பெறச் செல்லும் மாணவர்களும் அப்படித்தான். ஆங்கில முறைப்படி விருந்திற்குச் செல்வோர் பாஸிஸ்டுகள் ஆகவேண்டும். கறுப்புக்கும், சிவப்புக்கும் மதிப்பு கொடுப்பது மனப்பான்மையைப் பொருத்தது. நாம் இன்று இழிந்த நிலையிலுள்ளோம் என்பதைக் காண்பிப்பதற்காகவே கறுப்புச்சட்டை அணிந்துள்ளோம். ஒன்று நாம் அல்லது நமது எதிரிகள் அறியவேண்

டும். போராட்டத்தில் அது நமது அழிவிற்கு அறிகுறியாக இருக்கட்டும். இல்லையேல் நம் எதிரிகளின் அழிவைக் காட்டும் அறிகுறியாக இருக்கட்டும் என்று திராவிடர்கள் போராட்டத்தில் வெற்றி பெறுகிறார்களோ அன்றுதான் கறுப்புநிறம் சிவப்பாக மாறும் என்பது உறுதி. கறுப்புச் சட்டை அணிந்துள்ள நம்மைப்பார்த்து இகழ்கிறார்கள். "இந்தியன் எக்ஸ்புரஸ்" செய்தித்தாளில் கறுப்புச் சட்டைப் படை இயக்கததை இழித்துக் கூறுவதுபோல் ஒரு படம் வந்திருந்ததை யாரும் பார்த்திருப்பீர்கள். அப்பத்திரிகையின் ஆசிரியர் கொயங்கா ஒரு வட நாட்டான். அந்தப் படத்தில் பெரியாரைப் பிச்சைக்காரனைப்போன்று கறுப்பு நிறத்தில் போடப்பட்டிருக்கிறது. அவர் கையில் ஒரு கிழிந்த தொப்பியை ஏந்தி பிச்சை எடுக்கிறார். அவர் முன்பு ஒரு கறுப்பு உருவம் வந்துகொண்டிருக்கிறது. பெரியார் இடுப்பில் கட்டப்பட்டிருக்கும் கயிற்றைப் பின்னால் வரும் நான்கைந்து குருடர்கள் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைக்கண்டு பக்கத்திலுள்ள கடையிலிருந்துகொண்டு பூணூல்தவளும்தொந்தியுடன்கூடிய ஒரு ஐயர் சிரிப்பதைப் போலவும், அண்டை வீட்டின் கதவருகில் ஒரு ஐயர் குடும்பம் நின்று இதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருப்பது போலவும் படம் போடப்பட்டிருக்கிறது. இந்நாட்டிற்கு ஆடு மாடு மேய்ப்பதற்காக வந்த ஒரு பிச்சைககாரக் கூட்டம், ஒண்ட வந்த கூட்டம் நாட்டு மக்களின் தலைவரை தலைவரை இகழ்ந்துரைக்க முற்பட்டதென்றால், அது அந்தப் பிச்சக்கார கூட்டத்தின் ஆணவமல்லவா? படம் போடுவது கருத்தை விளக்குவதற்கு என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன் அதற்கும் ஒரு முறை வேண்டாமா? இழிவான முறையில் போடுவதா? சரி நாங்கள் சொல்லுகிறோம் நீ படம் போடு! நீ இழித்துக் கூறும் எண்ணத்துடனேயே போடு! அந்தராத்மாவோடு பேசும் மகாத்மாவின் பேரால் போடு! அகிம்சையின் பேரால் போடு! ஆனவத்தின் பேரால் போடு! எதேச்சதிகாரக் கட்சி மனப்பான்மையின் பேரால் போடு! சுயராஜ்யத்தின் பேரால் போடு! இந்நாட்டில் மற்ற கட்சிகள் இருக்கக் கூடாது என்ற எண்ணத்தின் பேரால்

போடு! உன்னால் எவ்வளவு இழித்துக் கூற முடியுமோ அவ்வளவு இழித்துக் கூறிப் படம் போடு! அப்படியெல்லாம் போட்டால்தான் எங்கள் இரத்தம் கொதிக்கும். அப்போதுதான் இந்த மானமிழந்திருக்கும் சமுதாயத்திற்கு மானவுணர்ச்சி வரும். எங்களின் உடம்பு கூறு கூறாக வெட்டப்பட்டாலும், உறுப்புக்கள் தனித்தனியே பிரித்தெடுக்கப்பட்டாலும். தலைகள் உருட்டப்பட்டாலும் சிந்தப்படும் குருதியின் ஒவ்வொரு துளியும் ஆரிய ஆணவத்தின் ஆணிவேருக்கு விடப்படும் நச்சுநீர்! நச்சுநீர்!! நச்சுநீர்!!! என்பதைமட்டும் உணர்க. பிரெஞ்சுப் புரட்சியை சற்று நினைத்துப்பார். புரட்சிப்புயல் வீசத்தொடங்கிய காலை நேரத்தில் அரசன் உறங்கிக்கொண்டிருந்தான் மாளிகையில் வெடிகுண்டின் சப்தம் கேட்டது. மந்திரி அரசனது அறையில் நுழைந்தான். அரசனைத் தட்டி யெழுப்பினான். கண்ணைக் கைகளால் துடைத்துக்கொண்டு எழுந்த அரசன் "என்ன அமைச்சனே! பூசல் போல் இருக்கின்றதே" என்றான். மந்திரி "பூசலல்ல புரட்சி" என்றான். புரட்சி ஆணவங்கொண்ட அரசனின் தலையை உருட்டியது. ஆணவம் முற்றினால் அந்நிலை வரும் என்பதை ஆரியமே நீயுணர். இறுதியாக நமது புரட்சிக் கவிஞர் பாடல் ஒன்றை மட்டும் நினைவுறுத்த விரும்புகிறேன்.

இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே!
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே!
வாயடியும் கையடியும் மறைவதெந்நாள்?
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்தவற்றைச்
சோத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே! இல்லையாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும்!

எனவே இக்கருத்துக்கள் திராவிட மாணவர்கள் வுள்ளத்தே ஏடுகள் புரட்டும்போது எதிர்படவேண்டும். பூகோளம் புரட்டும் போதும், வரலாறு புரட்டும்போதும் உங்கள்

நாட்டை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் நம் நாட்டை நல்ல முறையில் அறிந்தால்தான், ஏட்டில் கண்டதை நாட்டில் பரப்பி, மக்களுக்கு நல்லறிவையூட்டி நல்ல தீர்ப்பு அளிக்கும்படி செய்ய இயலும். என்னை இங்கு இவ்வளவு நேரம் பேச அனுமதித்த தலைவர் அவர்களுக்கும் என்னை இங்கு அழைத்துப் பேசுதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்த மாணவர் கழகத்தாருக்கும் என் வணக்த்தையும், நன்றியையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**முற்றிற்று !**

T2
Ro